©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

No. 306] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 7, 2011
Aavani 21, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை.**

**புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முள்ளங்குறிச்சி ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை.**

*[ந.க. எண் 2095/2009/அ3(ஊ.ரா.)]*

**No. VI(2)/445(a-1)/2011.**

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், முள்ளங்குறிச்சி ஊராட்சித் தலைவர் திரு. எம். கோவிந்தசாமி என்பவர் ஊராட்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன், ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளை பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காகவும், இவர் தொடர்ந்து ஊராட்சி தலைவராகச் செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது ஊராட்சித் தலைவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி முள்ளங்குறிச்சி ஊராட்சித் தலைவர் திரு. எம். கோவிந்தசாமி என்பவரை ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)–ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

**புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விளத்துப்பட்டி ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை.**

*[ந.க. எண் 3267/2009/அ3(ஊ.ரா.)]*

**No. VI(2)/445(a-2)/2011.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், விளத்துப்பட்டி ஊராட்சித் தலைவர் திருமதி க. கலைச்செல்வி என்பவர் ஊராட்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன், ஊராட்சி நிதியில் விதிமுறைகளை பின்பற்றாமல் மிகைச்செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காகவும், இவர் தொடர்ந்து ஊராட்சி தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது ஊராட்சி தலைவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி விளத்துப்பட்டி ஊராட்சி தலைவர் திருமதி க. கலைச்செல்வி என்பவரை ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)–ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

புதுக்கோட்டை,
2011 செப்டம்பர் 6.

**ப. மகேஸ்வரி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.